

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 20-09-2024


# மலர்க மாநில சுயாட்சி - 1

“மாநில சுயாட்சியை வென்றெடுக்க சட்ட முன்னெடுப்புகளை கழகம் மேற்கொள்ளும்” என்று திராவிட முன்னேற்றக் கழகப் பவள விழா - முப்பெரும் விழாப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரக்க முழக்கமிட்டுள்ளார்.

**“நமது எல்லாக் கனவுகளும் நிறைவேறிவிட்டதா எனக் கேட்டால்... இல்லை! மாநில உரிமைகளை வழங்கும் ஓர் ஒன்றிய அரசு அமையவில்லை. நிதி உரிமை உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு இன்னமும் நாம் போராட வேண்டிய நிலை தான் இருக்கிறது. பேரறிஞர் அண்ணாவும் - தலைவர் கலைஞரும் வலியுறுத்திய மாநில சுயாட்சிக் கொள்கை என்பது நமது உயிர்நாடிக் கொள்கைகளில் ஒன்று. எல்லா அதிகாரமும் கொண்டவைகளாக மாநில அரசுகளை மாற்றும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் சட்ட முன்னெடுப்புகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக, உறுதியாகச் செய்யும்” என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வழங்கிய செய்தி மட்டுமல்ல, இந்தியா முழுமைக்குமான செய்தி ஆகும்.**

“மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி” என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முழக்கம். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு நடைபெற்ற திருச்சி மாநாட்டில் ஐம்பெரும் முழக்கங்களை தலைவர் கலைஞர் வகுத்துக் கொடுத்தார். அதில் ஐந்தாவது முழக்கம்தான் இது.

பன்முகத்தன்மை கொண்ட இந்த பரந்துவிரிந்த இந்திய ஒன்றியத்தின் ஒருமைப்பாடு காலம் கடந்தும் நிலைபெற வேண்டுமானால் அதற்கு ஒரே மருந்து மாநில சுயாட்சிதான் என்பதை பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் காலம் தோறும் வலியுறுத்திக் கொண்டே வந்தார்கள்.

இந்தியா ஒரு நாடல்ல, அது பல்வேறு மொழிவழி தேசிய இனங்கள் கொண்ட ஒரு துணைக்கண்டமாகும். மொழிவழி தேசிய இனம் கொண்ட பல்வேறு பகுதிகளை, ஒன்றாக இணைத்து ஒரே இடத்தில் அதிகாரத்தைக் குவிக்கும் வகையில் ஆக்கி பிரிட்டிஷ் அரசு ஆண்டது. அதுதான் தங்களுக்கு வசதியானது என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நினைத்தார்கள். அதற்காக உருவாக்கப்பட்டதுதான் - அதிகாரம் பொருந்திய மத்திய அரசு ஆகும்.

இன்றைக்கு நாம் வைத்திருக்கும் டெல்லி அதிகார மையமானது 1833 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சிச் சட்டத்துக்குப் பிறந்த குழந்தைதான். பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அரசின் சட்டத்தை அப்போது நீட்டித்தது பிரிட்டிஷ் நாடாளுமன்றம். அன்றைக்கு வங்காள மாகாண ஆளுநராக இருந்தவரை, இந்தியாவுக்கே கவர்னர் ஜெனரலாக ஆக்கினார்கள். அன்றைய பம்பாய், மெட்ராஸ் மாகாண ஆளுநர்களின் அதிகாரங்களும் பறிக்கப்பட்டு கவர்னர் ஜெனரலுக்கே போனது. 1857 சிப்பாய் கலகம் எனப்படும் சுதந்திரப் போர் நடைபெற்ற காரணத்தால் அதனை அடக்குவதற்காகவும் அனைத்து அதிகாரங்களையும் கவர்னர் ஜெனரலுக்கே கொடுத்தார்கள்.

இந்தியா முழுமைக்கும் வரி விதிக்கும் அதிகாரத்தை கவர்னர் ஜெனரலே எடுத்துக் கொண்டார். நிதி அதிகாரத்தை மொத்தமாக மாகாணங்களில் இருந்து பறித்தார்கள். இதனை முதலில் எதிர்த்தவர், அன்று மெட்ராஸ் மாகாணத்தின் ஆளுநராக இருந்த சார்லஸ் ட்ரெவிலியன். ‘மையப்படுத்தப்படும் வரி விதிப்பு முறையானது மெட்ராஸ் மாகாணத்தின் வளர்ச்சிக்கு உதவாது’ என்று ‘மாநில சுயாட்சிக் குரலை’ ஓங்கி ஒலிப்பவராக பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஆளுநர் இருந்தார். ஆனால் இன்று சுதந்திர இந்தியாவில் அடக்குமுறை ஆளுநர்களே இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டை முன்மாதிரி மாநிலம் என்று ஏன் சொல்கிறோம் என்றால்.. 1860 ஆம் ஆண்டே மெட்ராஸ் மாகாணத் தொழில் கூட்டமைப்பினர் இந்த வரி விதிப்பு முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். (பா.ஜ.க. ஆதரவாளராகவே இருந்தாலும் ஜி.எஸ்.டி.யை எதிர்த்து அன்னபூர்ணா அதிபர் கேள்வி கேட்டது இதன் தொடர்ச்சிதானே!)

இப்படி மெட்ராஸ் மாகாணத் தொழில் கூட்டமைப்பினர் கேள்வி கேட்க, அன்றைய ஆளுநர் சார்லஸ் ட்ரெவிலியன் தான் தூண்டுகிறார் என்று சொல்லி அவரையே ஆளுநர் பதவியில் இருந்து பிரிட்டிஷ் ஆட்சி தூக்கியது. இப்படி அராஜகமாக அறிமுகம் செய்யப்பட்டதுதான், மையப்படுத்தப்பட்ட நிதி அதிகாரம் ஆகும். அதுதான் சுதந்திர இந்தியாவிலும் தொடர்கிறது. மாநிலங்களின் வளத்தை மொத்தமாகச் சுரண்டி இந்திய ஒன்றிய அரசு வைத்துக் கொள்கிறது. இந்த இடத்தில்தான் ‘மாநில சுயாட்சிக் கொள்கை’ உதயமாகிறது.

**‘க்ரீம் பன்னுக்கு ஏன் இவ்வளவு வரி போடுகிறீர்கள் என்று கேட்கக் கூட உரிமை இல்லாத நிலை இன்று உருவாகி இருக்கிறது’ என்று முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்ட கேள்வி, கிண்டலான கேள்வி அல்ல, வேதனையான கேள்வியாகும். இதில்தான் ஒன்றிய அரசின் அனைத்து எதேச்சதிகாரத் தன்மைகளும் அடங்கி இருக்கிறது.**

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் அதிகாரக் குவியல் கொண்ட அரசுக்கு எதிராக முதல் குரல் கொடுத்தது நீதிக்கட்சி. சமூகநீதி மட்டும்தான் நீதிக்கட்சி பேசியது என்று பலரும் தவறாக நினைத்துக் கொள்கிறார்கள். இல்லை, கூட்டாட்சி முறையையும் அந்தக் காலத்திலேயே வலியுறுத்தியது நீதிக்கட்சி.

1918 அக்டோபர் 2 அன்று இங்கிலாந்து பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் பேசும்போதும், “வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஏற்று அதற்கேற்ப அரசியல் சீர்திருத்தம் செய்வது ஒன்றுதான் தற்போது சென்னை அரசியலில் நிலவி வரும் நோய்களை ஒழிக்க வழி’ என்றார் டி.எம்.நாயர். “1909இல் இஸ்லாமியர்க்கு வழங்கப்பட்டது போன்ற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பார்ப்பனரல்லாதாருக்கு வேண்டும்” என்றார் அவர். இதனுடன் இணைத்து கூட்டாட்சி முறையையும் வலியுறுத்தினார். Our immediate out look, Political reconstruction in india - ஆகிய தலைப்புகளில் 1917 ஆம் ஆண்டே பேசி இருக்கிறார் டி.எம்.நாயர்.

‘அனுப்பி வைக்கப்படும் ஆளுநர்களுக்கு எதுவும் தெரியாது’ என்றும் 100 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லிய தொலைநோக்காளர்தான் டி.எம். நாயர்.

- தொடரும்



தலைமைச் செயலகத்தில் நேற்று (19.9.2024) இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு அரசின் முத்திரை திட்டங்கள் ( ICONIC PROJECTS ) தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், துறை சார்ந்த செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இராஜபாளையம் அருகே நச்சாடை தவிர்தருளிய சுவாமி

# கோவிலுக்குச் சொந்தமான ரூ.20.66 கோடி மதிப்புள்ள நிலங்கள் மீட்பு!

## இந்து சமய அறநிலையத் துறை நடவடிக்கை!

சென்னை, செப். 20 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகக் கட்டுபாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் நேற்று (19.09.2024) விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், தேவதானம், அருள்மிகு நச்சாடை தவிர்தருளிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ. 20.66 கோடி மதிப்பிலான 103 ஏக்கர் 47 செண்ட் நன்செய் நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது.

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், தேவதானம், அருள்மிகு நச்சாடை தவிர்தருளிய சுவாமி திருக்கோயிலானது இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் செயல் அலுவலர் மற்றும் பரம்பரை அறங்காவலரால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு கோவிலூர் கிராமத்தில் 103 ஏக்கர் 47 செண்ட் பரப்பளவுள்ள நஞ்சை நிலங்கள் தேவதானம், அம்மையப்பா விவசாய குத்தகைதாரர் கூட்டுறவு சங்கத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. அச்சங்கத்தினர் நீண்ட காலமாக திருக்கோயிலுக்கு குத்தகை செலுத்தாத காரணத்தினால், மேற்படி குத்தகையினை செலுத்தக் கோரி மதுரை மாவட்ட வருவாய் நீதிமன்றத்தில், வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, மதுரை வருவாய் நீதிமன்ற தனித்துறை ஆட்சியர் அவர்களால், 20.01.2015 அன்று வழங்கப்பட்ட உத்தரவில், குத்தகை பாக்கியை மூன்று மாத காலத்திற்குள் செலுத்தத் தவறும்பட்சத்தில் தபசில் சொத்திலிருந்து எதிர்மனுதாரர்கள் வெளியேற்றப்படுவர் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி உத்தரவினை எதிர்த்து, அம்மையப்பா விவசாய குத்தகைதாரர் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட முதன்மை நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவின் மீது 11.08.2021 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், குத்தகை பாக்கியில் 50% தொகையினை வைப்பீடு (டெபாசிட்) செய்து வழக்கினை தொடர உத்திரவிடப்பட்டும், இது தொடர்பாக மேற்படி எதிர்மனுதாரர்களுக்கு இத்திருக்கோயில் செயல் அலுவலரால் பலமுறை அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் எதிர்மனுதாரர்களால் வைப்பீடு ஏதும் செலுத்தப்படவில்லை.

இந்நிலையில் இந்து சமய அறநிலையத்துறை மதுரை மண்டல இணை ஆணையர் அவர்களின் உத்தரவின் படியும், மேற்படி திருக்கோயில் பரம்பரை அறங்காவலரின் 15.07.2024 மற்றும் 09.09.2024 நாளிட்ட தீர்மானத்தின் படியும் நேற்று (19.09.2024) விருதுநகர் மாவட்ட உதவி ஆணையர் திருமதி டி.வளர்மதி தலைமையில் காவல் துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் ஆகியோரின் உதவியுடன் திருக்கோயிலுக்குச் சொந்தமான 103 ஏக்கர் 47 செண்ட் பரப்பளவுள்ள நன்செய் நிலம் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு, திருக்கோயில் வசம் சுவாதீனம் எடுக்கப்பட்டது. மேற்படி சொத்தின் மதிப்பு தற்போதைய சந்தை மதிப்பு ரூ. 20.66 கோடியாகும். .

இந்நிகழ்வின்போது தனி வட்டாட்சியர்கள் (ஆலய நிலங்கள்) க.மாரிமுத்து (மதுரை), சு.க. சிவக்குமார் (விருதுநகர்), திருக்கோயில் பரம்பரை அறங்காவலர் துரை. ரத்னகுமார், செயல் அலுவலர் திருமதி க.கலாராணி மற்றும் சிறப்பு பணி செயல் அலுவலர்கள், ஆய்வர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

### இந்தியாவிற்கான ஆஸ்திரேலிய தூதர்

# தமிழ்நாடு மருத்துவத் துறை திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!



சென்னை, செப். 20-

இந்தியாவிற்கான ஆஸ்திரேலிய தூதர் சிலாய் ஸாகி (Ms. Silai Zaki) சந்தித்து தமிழ்நாடு மருத்துவத்துறை திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார்,

நடப்போம் நலம் பெறுவோம் “8 Km Health Walk” பங்கேற்பதற்கு விருப்பம் தெரிவித்தார் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை நேற்று (19.09.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான ஆஸ்திரேலிய தூதர் சிலாய் ஸாகி (Ms. Silai Zaki) அவர்கள் நேரில் சந்தித்து, தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்புகள், திட்டங்கள், வளர்ச்சி பணிகள் குறித்து கேட்டறிந்து ஆலோசனை மேற்கொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

இந்தியாவிற்கான புதியதாக பொறுப்பேற்றுள்ள ஆஸ்திரேலிய தூதர் மரியாதைக்குரிய சிலாய் ஸாகி (Ms. Silai Zaki) அவர்கள் மரியாதை நிமித்தமாக நேற்று சந்தித்தார்கள்.

**மருத்துவத்துறை திட்டங்கள்!**

இந்திய ஆஸ்திரேலிய சுகாதார சேவைகள் பற்றி பல்வேறு கருத்துகள், பரிமாறிக்கொள்ளப்பட்டது. மேலும், ஆஸ்திரேலிய நட்புறவை வளர்க்கும் திட்டங்கள் குறித்தும் அவர்கள் பல்வேறு வகையான செய்திகளை கூறினார்கள். பொதுவாக ஆஸ்திரேலியாவை பொறுத்தவரை, சற்றொப்ப 10 இலட்சம் இந்தியர்கள் வசித்து வருவதாகவும், அதில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களும் வாழ்ந்து வருவதாகவும் எடுத்து சொன்னார்கள். ஆஸ்திரேலியாவை பொறுத்தவரை, முதியோருக்கான மருத்துவ சேவைகள், அதேபோல் பெண்களுக்கான மார்பக புற்றுநோய் மருத்துவ திட்டங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் மருத்துவ திட்டங்கள் மற்றும் உதவிகள் போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்து பேசி, அதுகுறித்து நேரடியாக பார்வையிட அழைப்பு விடுத்துள்ளார்கள். அவர்களிடத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மருத்துவ துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்ற, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, இதயம் காப்போம், சிறுநீரக பாதுகாப்பு திட்டம், மக்களைத்தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம், பாதம் பாதுகாப்போம், நடப்போம் நலம் பெறுவோம் போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்து எடுத்துச்சொல்லப்பட்டது. குறிப்பாக நடப்போம் நலம் பெறுவோம் திட்டம் அவர்கள் கவர்ந்த திட்டமாக இருந்தது, அது குறித்து விரிவாக கேட்டுத் தெரிந்து கொண்டு, சென்னையில் உள்ள நடப்போம் நலம் பெறுவோம் திட்டத்தில் கலந்து கொண்டு நடைபயிற்சி மேற்கொள்ள உள்ளதாக மகிழ்ச்சியான செய்தியினை கூறினார்கள் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வ விநாயகம், ஆஸ்திரேலியா நாட்டின் துணை தூதர் ஜெனரல்டேவிட் எக்லெஸ்டன், (Mr. David Eggleston) ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பிச்சையெடுக்கும் சிறுவர், சிறுமியரை

# பள்ளியில் சேர்த்த மனித சேவை!

## தமிழ்நாடு அரசின் கொத்தடிமை கண்காணிப்புக் குழு உறுப்பினருக்குப் பாராட்டு!

சென்னை, செப். 20 -

வாடிப்போன முகம், கிழிந்த உடைகள், சீவப்படாத தலைமுடி, பல நாட்களாக சரியாக சாப்பிடவில்லை என்பதை குறிக்கும் முகம். யாராவது தன்னை பேச அழைப்பார்கள் என்று சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டான் 8 வயது சிறுவன், அமித்.

பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திய அமித், வறுமையிலிருந்து தப்பிக்க வேறு வழி தெரியாததால், ரயில் நிலையங்களிலும், ரயில்களிலும் பாட்டுப்பாடி பிச்சையெடுப்பதையே தொழிலாக கொண்டுள்ளான்.

சமீபத்தில், சென்னை புறநகர் ரயிலில் இந்த சிறுவன் பாட்டுப்பாடி, பிச்சை எடுப்பதை கண்டு அதிர்ச்சியடைந்த தமிழக அரசின் கொத்தடிமை கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஜஸ்டின் ஆண்டனி.

இந்த சிறுவனின் பெற்றோர் மிகவும் ஏழ்மையான சூழ்நிலையில் வாழ்வதும், அதுவே இந்த சிறுவனையும் பெற்றோரையும் பிச்சை எடுக்க தூண்டியது எனவும் தனது 40 நிமிட ரயில் பயணத்தின் போது புரிய வந்ததாக கூறுகிறார் ஜஸ்டின் ஆண்டனி.

ஆரம்பத்தில், இந்த சிறுவன் பேசத் தயங்கி, விலகிச் செல்ல முயன்றுள்ளான். ஆனால் ஜஸ்டின் ஆன்டணியின் கனிவான பேச்சால் தனது துயரங்களை பகிர்ந்துள்ளான் சிறுவன் அமித். சென்னையில் உள்ள திரிசூலத்தில் தனது பள்ளியைத் தொடர விரும்பியுள்ளான் இச்சிறுவன்.

ஆனால், இந்த இளம் வயதிலேயே இச்சிறுவனை பிச்சை எடுக்க தூண்டி, பணத்தின் சுவையைக் காட்டியுள்ளனர் சிறுவனின் பெற்றோர்.

இந்த குறுகிய ரயில் பயணத்ினூடே, கல்வியின் மதிப்பு மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றி சிறுவனுக்கு விளக்கியுள்ளார் ஜஸ்டின் ஆன்டணி.

இதனால், சிறுவன் தனது மூன்றாம் வகுப்பைத் தொடர்வதாக உறுதியளித்துள்ளான். சம்பவத்தை நேரில் பார்த்த பயணிகள், சரியான நேரத்தில் செயல்பட்ட ஜஸ்டின் ஆண்டனியை மிகவும் பாராட்டியுள்ளனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக ஒன்றிய பா.ஜ.க. அரசு அமைத்திருந்த குழுவின் பரிந்துரைகளுக்கு பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் கொடுத்துள்ளதாமே ?

**பெரியதம்பி :** **ஆமாம்பா! ‘கிடக்கிறது எல்லாம் கிடக்கட்டும்; கிழவியைத் தூக்கி மனையில் உட்கார வை’ - என்ற பழமொழியைப் போல இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த செயல்.**

**தீர்க்க வேண்டிய எவ்வளவோ பிரச்சினைகள், நிறைவேற்ற வேண்டிய எத்தனையோ உறுதிமொழிகள் இருக்கும் போது, மக்களை வழக்கம் போல் திசை திருப்புவதற்காக ஒன்றிய பா.ஜ.க. அரசு கையில் எடுத்திருக்கும் உத்தியே இது !**

**ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது முழுக்க முழுக்க சாத்தியமே இல்லாதது.**